# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2003 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

(2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2003, மாச்சு மாதம் 21 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 12.25 தபாற் செலவு : ரூபா 4.50

# 2003 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*[2003 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ– ஓ. 91/2002 / 4737*

**2002, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் வருமானம் மற்றும் சொத்துக்கள் பற்றிய திரட்டொன்றைச் சமர்ப்பிக்கத் தவறிய ஆட்களை, அது தொடர்பில் வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்வதை இயலச்செய்வதற்கும்; வெளிப்படுத்துகையைச் செய்தவர்களுக்கும், வெளிப்படுத்துகையைச் செய்யாதவர்களுக்கும் சில சலுகைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கும், தற்போதுள்ள வரிச்சட்டங்களுடன் அத்தகைய ஆட்களை எதிர்காலத்தில் இணங்கியொழுகச் செய்யும் நோக்குடன், குறித்தசில நியதிச்சட்டங்களின்கீழான சில வரிகளைச் செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்தும், புலனாய்வுகள், குற்றவழக்குத் தொடுப்புக்கள், மற்றும் தண்டங்களிலிருந்தான பொறுப்பிலிருந்து அத்தகைய ஆட்களை விடுவிப்பதற்கும், 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; அத்துடன் அதனுடன் தொடர்பான அல்லது அதற்கு இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :*

*சுருக்கப் பெயர்.*

*1. இச்சட்டம், 2003 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2003 யூன் 30 ஆம் தேதிக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்துகை.*

*2. (1) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டங்களின்கீழான வரிவிதிப்பு தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படிருந்தும் தனது வருமானத்தில் மற்றும் சொத்துக்கள் மூலம்பற்றி அல்லது அதன் அத்தகைய வரிக்கான தனது முழுமையான பொறுப்பு அல்லது ஏதேனும் பாகம் பற்றி 2002, மாச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் விடயத்துக்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது இயைபான அதிகாரிக்கு வெளிப்படுத்தியிராத, இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள எவரேனும் ஆள், 2002 ஏப்பிறல் 1 ஆம் தேதியில் உள்ளவாறான தனது வருமானத்தின் மூலங்கள் மற்றும் சொத்துக்கள் பற்றிய வெளிப்படுத்துகை ஒன்றை, 2003, யூன் 30 ஆம் தேதி யன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாம்.*

ஆயின், எவ்வாறாயினும் 2002 மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன் இயைபான எல்லாக் காலப் பகுதிகள் தொடர்பிலும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது இயைபான அதிகாரிக்கு தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகைகளைச் செய்திருந்த ஆளெவரும் தமது நிலைமையின் செம்மையை ஆய்ந்தறிவதற்காக 2 ஆம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்யலாம் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி அல்லது வேறு இயைபான அதிகாரி அத்தகைய ஆளுக்கு 3 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட விடுபாட்டுரிமையை வழங்குதல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "வருமானத்தின் மூலங்கள்" என்பது காசு என்னும் வகையான அல்லது வேறு ஏதேனும் வகையில் பெறப்பட்ட வருமானத்தை உள்ளடக்குதல் வேண்டும். "சொத்துக்கள்" என்பது அசைவற்ற ஆதனம், அசைவுள்ள ஆதனம், வங்கியிலுள்ள மீதிகள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள், கால் வைப்புக்கள் அல்லது அதே வகையான வேறு ஏதேனும் வைப்பு, பிணைப் பொறுப்பு என்ற வழியாக வழங்கப்பட்ட பணம் அல்லது கடன்கள் மற்றும் கையிலுள்ள காசு என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) பின்னர் செலவு செய்யப்படாத 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று உள்ளவாறான கையிலுள்ள காசு, இப்பிரிவின் நியதிகளின்படி, வெளிப்படுத்துகையைச் செய்வதற்கு முன்பு வங்கியொன்றில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவர் சார்பில் விசேடமாக எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட ஆணையாளர் பதவி வரிசைகளுக்குக் கீழ்ப்படாத அலுவலர் ஒருவர், (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி பெறப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையை அது பெறப்பட்ட முப்பது நாட்களுக்குள் அது பெறப்பட்டமை பற்றிய எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தல் வேண்டும்.

ளிப்படுத்து யைச் செய்யும் களுக்கு ளிக்கப்படும் டுபாட்டுரிமை.

3. (1) இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையொன்றைச் செய்யும் எவரேனும் ஆள், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் வரிசெலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து அல்லது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்

கீழான ஏதேனும் தவறுக்காக ஏதேனும் புலனாய்விலிருந்து, குற்றவழக்குத் தொடுத்ததிலிருந்து அல்லது தண்டப்பணத்திலிருந்து 2002, மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவுறும் ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் அத்தகைய வெளிப்படுத்துகை —

(அ) வரிகள் செலுத்தப்படாமை ;

(ஆ) வெளிப்படுத்தப்பட்ட வருமானத்தின் மூலங்கள் அல்லது சொத்துக்கள் ;

(இ) அத்தகைய சொத்துக்கள் எந்த இலாபங்களிலிருந்து அல்லது ஈட்டப்பட்ட வருமானத்திலிருந்து நிதியளிக்கப்பட்டனவோ அந்த இலாபங்கள் அல்லது வருமானம் ;

(ஈ) அத்தகைய சொத்துக்கள் நிதியளிக்கப்பெற்ற முறை;

(உ) மேற்கூறப்பட்டவை தொடர்பிலான அல்லது அதன் இடைநேர்விளைவின்தான ஏதேனும் கருமம்,

தொடர்புறுத்துமளவுக்கு முழுப்பாதிப்பின்மையை அனுபவித்தல் வேண்டும்.

(2) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின் நிருவாகப் பொறுப்பளிக்கப்பட்ட இயைபான அதிகாரி, 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆள் மேற்குறித்துரைக்கப்பட்டவாறாக முழுமையான விடுபாட்டுரிமை அளிக்கப்படல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் (423 ஆம் அத்தியாயமான) செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நோக்கங்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட ஏதேனும் சொத்து தொடர்பில் 2002 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல் எதற்கும் அத்தகைய கொடுக்கல் வாங்கல் 2002 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் இடம்பெற்றிருந்தாற்போன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அதே விடுபாட்டுரிமை அளிக்கப்படுதல் வேண்டும்.

புலனாய்வுகள் குற்றவழக்குத் தொடுப்புகள் மற்றும் பிணையங்களை மீளப் பெறப்படல்.

**4.** (1) இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆளுக்கெதிராக 2002 மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் காலப்பகுதி தொடர்பில் ஏற்கனவே தொடங்கப்பட்ட ஏதேனும் புலனாய்வு அல்லது குற்றவழக்குத் தொடுப்பு அல்லது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழ் அத்தகைய ஆளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஆனால் செலுத்தப்படாதுள்ள ஏதேனும் தண்டம், வேறேதேனும் சட்டத்தில் முரணாக உள்ளது எது எப்படியிருப்பினும் மீளப்பெறப்படுதல் வேண்டும்.

(2) இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகை ஒன்றைச் செய்த ஆளொருவர் தொடர்பில் 2002 மாச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலப்பகுதி தொடர்பில், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழான வரியொன்று தொடர்பில் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழான பிணக்கிலுள்ள ஏதேனும் வரி, அவரால் செலுத்தப்படற்பாலதான வரித்தொகையாகவுள்ள அத்தகைய ஆளினால் குறித்துரைக்கப்பட்ட வரி, அத்தகைய காலப்பகுதி தொடர்பில் சரியானதெனவும் அவ்வாளின் இறுதி வரிப் பொறுப்புடைமையைப் பிரதிபலிப்பதாகவுள்ளதெனவும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின் நிருவாகம் பொறுப்பளிக்கப்பட்ட இயைபான அதிகாரியினால் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும் :

ஆயின், 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆளின் உடன்பாட்டுடன் தீர்க்கப்பட்ட பிணக்கிலுள்ள எவ்வரியும் மீண்டும் தொடங்கப்படக்கூடாது.

(3) இரண்டாம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையொன்றைச் செய்யாத ஆளொருவர் தொடர்பில் 2000, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழான ஏதேனும் வரி, பிணக்கிலுள்ளவிடத்து அப்போது, அவரால் செலுத்தப்படற்பாலதான வரித்தொகையாகவுள்ளதென அத்தகைய ஆளினால் குறித்துரைக்கப்பட்ட

வரி, சரியானதெனவும், அத்தகைய காலப்பகுதிதொடர்பில் அவ்வாளின் இறுதி வரிப்பொறுப்புடைமையைப் பிரதிபலிக்கின்றதாகவுமுள்ளதெனவும் இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின் நிருவாகப் பொறுப்பளிக்கப்பட்ட இறைபடான அதிகாரியினால் ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும் :

ஆயின், 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையைச் செய்யும் ஆளின் உடன்பாட்டுடன் தீர்க்கப்பட்ட பிணக்கிலுள்ள எவ்வரியும் மீண்டும் தொடங்கப்படலாகாது.

(4) மேற்கூறப்பட்ட (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் நோக்கங்களுக்காக "குறித்துரைக்கப்பட்ட வரி" என்பது 2001/2002 தொடர்பிலான வரிமதிப்பீட்டாண்டுக்காக எவரேனும் ஆளினால் 2002 செத்தெம்பர் மாதம் 30 ஆந் தேதியன்று அன்று அதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XIII ஆம் அத்தியாயத்தின் நியதிகளின்படி செலுத்தப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வரியையும் உள்ளடக்கும்.

5. (1) 2002/2003 வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் வருமானவரி செலுத்துவதற்கு ஆளானவரும் அத்துடன், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் வருமானவரிக் கோவை அல்லாதவரும், 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வெளிப்படுத்துகையொன்றைச் செய்பவருமான எவரேனுமாள் : அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய வருமான வரி 2003, செத்தெம்பர் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்பட்டால், எதேனும் தண்டத்துக்கு ஆளாதலாகாது.

2002/2003 வரிமதிப் பீட்டாண்டுக்கான வரிப்பொறுப்புடைமை.

(2) (அ) 2002/2003 வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் முதல் காலாண்டுத்தவணை தொடர்பில் வருமானவரி செலுத்துவதான ஆளானவரும், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் வருமானவரிக்கோவை உள்ளவருமானவரும், வருமானவரி செலுத்துவதற்கு ஆளானவராக இருந்து, அத்தகைய வரியைச் செலுத்தாத அல்லது குறைவாகச் செலுத்தியவருமான எவரேனுமாள், 2003, செத்தெம்பர் 30 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர், அத்தகைய வரிமதிப்பீட்டாண்டுக்கான அத்தகைய வரி முழுமையாக அல்லது செலுத்தப்படாதவாறான அத்தகைய பாகம் செலுத்தப்பட்டால் ஏதேனும் தண்டத்துக்கு ஆளாதலாகாது.

(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறாக அத்தகைய ஆள், 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி அத்தேதிகளில் ஏனைய எல்லாக் காலாண்டுத் தவணைகளும் இறுதிக் கொடுப்பனவும் செலுத்துமதியாகவுள்ளஆதோ அத்தேதிகளில் 2002/2003 வரிமதிப்பீட்டாண்டுக்காக அதனைச் செலுத்துதல் வேண்டும். அக்கொடுப்பனவுகளில் உள்ள ஏதேனும் தவறுகை அத்தகைய சட்டத்தின்கீழ் தவறுகையிலுள்ள தவணை வரி தொடர்பான தண்டங்களுக்கு உள்ளாகும் விளைவை ஏற்படுத்தும்.

(3) இரண்டாம் பிரிவின்கீழ் வெளிப்படுத்துகையொன்றைச் செய்தவரும், 2002, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கு அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழ் வருமானவரி தவிர்ந்த வேறு ஏதேனும் வரி அல்லது அறவீட்டைச் செலுத்த ஆளானவருமான எவரேனுமாள், மேற்கூறப்பட்ட சட்டங்களில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய எல்லா வரிகள் அல்லது அறவீடுகளைச் செலுத்துதல் வேண்டும்.

இரகசியத் தன்மை.

6. (1) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களை நிருவகிப்பதற்கு தத்துவமளிக்கப்பட்ட எவரேனும் அதிகாரியும், அத்தகைய சட்டங்களின் ஏற்பாடுகளை நிருவகிப்பதில் ஈடுபட்டுள்ள வேறு எவரேனும் அலுவலர்களும், 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் உள்ள ஏதேனும் கருமம் அல்லது உள்ளடக்கப்பட்ட விடயம் தொடர்பிலும் வெளிப்படுத்துபவரின் அடையாளம் தொடர்பிலும் முழுமையான இரகசியத்தை எல்லா வேளைகளிலும் பேணுதலும் பேண உதவுதலும் வேண்டும்.

(2) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழ் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் சத்தியப்பிரமாணம், அச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட இரகசியச் சத்தியப்பிரமாணம் எனக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சத்தியப்பிரமாணத்தை மீறிச் செய்யப்படுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதவான் முன்னரான சுருக்க விசாரணைமீது ஓரிலட்சம் ரூபாவை விஞ்சாத

தண்டமொன்றுக்கு அல்லது ஒரு வருடத்தை விஞ்சாத இருவகையிலொன்று மறியற்றண்டனை அல்லது அத்தகைய தண்டம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

(3) எழுத்திலான ஏதேனும் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு எதுவும் அல்லது ஒழுங்குபடுத்துநர் எவரும் (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வெளிப்படுத்துநர் ஒருவரை அல்லது எவரேனும் ஆளை 2 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலை வெளிப்படுத்துமாறு கோருதலாகாது.

(4) சட்டமன்றம் எதுவும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனும் ஆளை, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டத்தின் சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளின்போது தவிர்த்து, 2 ஆம் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்துகையில் உள்ளடக்கப்பட்டுள்ள வேறு ஏதேனும் தகவலை வெளிப்படுத்துமாறு கோருதலாகாது.

7. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக இத்தால் பின்வருவன தெரிவிக்கப்படுகிறது — சந்தேகங்களைத் தவிர்த்தல்.

(அ) பணம் வைத்திருக்கும் அல்லது முதலீடுகளை வைத்திருக்கும் ஆளொருவருக்கான குறிப்பீடு, தனது பெயரில் அல்லது வேறு எவரினதும் பெயரில் அல்லது எவரினதும் பெயரின்றி பணம் வைத்திருக்கும் ஆளுக்கான குறிப்பீடொன்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தில் உள்ளது எதுவும், எவரேனும் ஆளுக்கு வருமதியாகவுள்ள வரியின் மீளளிப்பொன்றைக் கோருவதான குற்றவழக்கு ஒன்றை தொடர்வதிலிருந்து அல்லது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும்

சட்டங்களின்கீழான குற்றவழக்குத் தொடுப்பதை நாடுவதிலிருந்து அல்லது சிறப்புரிமையொன்றைக் கோருவதிலிருந்து அவரைத் தடுப்பதாக வாசித்துப் பொருள்கொள்ளப்படலாகாது.

ஒழுங்குவிதிகள்.

8. (1) அமைச்சர், இச்சட்டத்தால் விதித்துரைக்கப்படத் தேவைப்படுத்தப்படுகின்ற எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது இச்சட்டத்தின் கோட்பாடுகள் மற்றும் ஏற்பாடுகளின் அமுலாக்கத்துக்குப் பயனளிப்பதற்காக இச்சட்டத்தின்கீழ் செய்யப்படத் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அதிகாரமளிக்கப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் அது வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கென பாராளுமன்றத்தின்முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அதன்கீழ் முன்னர் புரியப்பட்ட எதற்கும் பங்கமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து இல்லாதொழிந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

(4) எத்தேதியில் ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிந்ததாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

தவறுகையின் விளைவுகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளினுள் வருதல்.

9. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்படுத்த எண்ணுகின்ற எவரேனுமாள், சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள்ளும் நடைமுறைகளுக்கமைவாகவும் அவ்வாறு செய்தல் வேண்டும். இச்சட்டத்தின் நியதிகளுக்கிணங்க அவசியமான நடவடிக்கைகளை எடுக்கத் தவறுகின்ற எவரேனுமாள், 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கிணங்கக் கையாளப்பட ஆளாதல் வேண்டும்.

10. சம்பந்தப்பட்ட சட்டங்களின் நியதிகளுக்கிணங்க எத்தேதியில் வரிக்கொடுப்பனவு தவறுகையிலுள்ளதோ அத்தேதியிலிருந்து ஐந்தாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் ஏதேனும் வரியை மீளப்பெறுவதற்கான எவ்வழக்கு நடவடிக்கைகளும் தொடுக்கப்படலாகாது. அல்லது இதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எவையேனும் சட்டங்களின்கீழ் முடிவுறா வழக்கு எதுவும் கொண்டு நடாத்தப்படலாகாது.

நிலைபேறாமை ஏற்பாடுகள்.

11. (1) இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் இத்தால் நீக்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தை நீக்குதலும் பேணலும்.

(2) நீக்கத்துக்கு முன்னர், 2002 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதியின்படி செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒவ்வொன்றும், அத்தகைய நீக்கம் எது எப்படியிருப்பினும் அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் : என்பதுடன், இச்சட்டத்தின் நியதிகளின்படி விடுபாட்டுரிமையை அல்லது பொறுப்பிலிருந்து விலக்களிப்பை அளிக்கும் நோக்கத்துக்காக, 2 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படல் வேண்டும் :

ஆயினும், அப்பிரிவின் நியதிகளின்படி எவரது வெளிப்படுத்துகை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அவ்வெவரேனுமாள் அவர், அவ்வாறு தேவைப்படுத்தினால், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்று மாத காலப்பகுதிக்குள், அச்சட்டத்தின் ஏற்பாட்டுடனான ஒத்திசைவுக்கு அதனைக் கொண்டுவருவதற்காக அத்தகைய வெளிப்படுத்துகையை மாற்ற, திருத்த, அல்லது வேறாக்க அனுமதிக்கப்படல் வேண்டும் என கோரிக்கைவிடுத்து விடயத்துக்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதி அல்லது இயைபான அதிகாரிக்கு விண்ணப்பிக்கலாம்.

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பொருள்கோடல். **13.** இச்சட்டத்தில் —

"அதிகாரசபை" என்பது, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களை நிருவகிக்கும் பொறுப்பளிக்கப்பட்ட ஏதேனும் திணைக்களத்தை உள்ளடக்குகின்றது ;

"கம்பெனி", "ஆட்களின் குழுமம்" மற்றும் "பங்குடைமை" என்பன 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 2000 ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"அசைவற்ற ஆதனம்" என்பது, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள நிர்மாணிக்கப்பட்ட அல்லது நிர்மாணிப்பின் கீழுள்ள ஏதேனும் சட்டத்தை உள்ளடக்குகின்றது ;

"புலனாய்வு" என்பது, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களின் கீழான விசாரணை, விசாரிப்பு, தேடுகை அல்லது வேறு ஏதேனும் நடவடிக்கை என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

"பணம்" என்பது, இலங்கை ரூபாக்களில் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளையும் உள்ளடக்கும் ;

"அசைவுள்ள ஆதனம்" என்பது, இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள எல்லா அசைவுள்ள ஆதனத்தையும் உள்ளடக்குகின்றது, ஆனால் பணத்தை உள்ளடக்கமாட்டாது ;

"தவறு" என்பது, அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் சட்டத்திலுள்ள ஏதேனும் தவறையும் உள்ளடக்குகின்றது ;

"ஆள்" என்பது, "ஆட்களின் குழுமமொன்றை", பகிரங்கக் கூட்டுத்தாபனத்தை மற்றும் பங்குடைமையொன்று உள்ளடக்குதல் வேண்டும் ;

"வரி" என்பது, இதற்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட, சட்டங்களின்கீழ் செலுத்தப்படற்பாலதான அல்லது அறவிடப்படும் ஏதேனும் வரி, அறவீடு, தண்டம், (ஏதேனும் தவறு தொடர்பில் ஏதேனும் தண்டம் உட்பட) இழப்பிப்பு அல்லது தண்டப்பணம் என்பனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் ;

"பிணக்கிலுள்ள வரி" என்பது, ஆணையாளர் தலைமை யதிபதியினால், தோதான அதிகாரியினால் அல்லது சம்பந்தப்பட்ட ஆளினால் ஏற்றுக்கொள்ளப்படாததும், இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள சட்டங்களில் ஏதேனுமொன்றின்கீழ் மதிப்பிடப்பட்டதுமான ஏதேனும் வரியை உள்ளடக்குதல் வேண்டும்.

## அட்டவணை

(2,3,4 மற்றும் 6 ஆம் பிரிவுகள்)

1. 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம்.
2. 1991 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு அறவீட்டுச் சட்டம்.
3. 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள் சேவைகள் என்பன மீதான வரிச்சட்டம்.
4. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம்.
5. 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்.
6. 1996 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நாடுகாக்கும் உதவுதொகைச் சட்டம்.
7. 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்.
8. 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம்.
9. 1983 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வ வரி மீதான மிகைவரிச் சட்டம்.

10. 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வ வரி மீதான மிகைவரிச் சட்டம்.

11. 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரிச் சட்டம்.

12. 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரிச் சட்டம்.

13. 1989 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி சட்டம்.

14. 1991 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தம்) சட்டம்.

15. 1992 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தம்) சட்டம்.

16. 1993 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தம்) சட்டம்.

17. 1994 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தம்) சட்டம்.

18. 1995 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரி (திருத்தம்) சட்டம்.

19. 2001 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, வருமான வரி மீதான மிகைவரிச் சட்டம்.

20. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய சூதாட்ட விதிப்பனவுச் சட்டம்.

21. 1980 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, மரணச்சொத்து வரிச் சட்டம்.

22. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 423)

23. 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டம்.

24. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி தீர்வை 52 (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

25. உற்பத்தித் தீர்வைக் கட்டளைச்சட்டம் (52 ஆம் அத்தியாயம்)

26. சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235).